**தலைப்பு 271 – திருகோணமலை மாவட்ட செயலகம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, மாவட்டச் செயலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் செயலகத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 271 – திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 18 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.16 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>2. பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை.<br>3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை. | 2.2<br>2.5(ஆ)<br>2.14 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தரப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகார மளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணி ப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அதற்காக உடனடியாவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற் கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் | 1. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்<br>2. பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் | 2.2<br><br>2.8 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடை பிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | இணக்கமின்மை | 2.15 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியள வானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.3 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டண ங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோ கத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல் | 2.10(அ) |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல்கள் மேற்கொள்வதெனவும் | 1. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை.<br>2. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள். | 2.7<br>2.5 |
| 128(1)(ங) | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடைமுறையிலுள்ள கட்டளைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றனர் எனவும், | குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக்கொள்வதில் குறைபாடுகள் | 2.17 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 பெறுகை செயன்முறையின் மூலம் வழங்கல்கள் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

2017 ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரக்கப்பட்ட வருடாந்த வரவு செயற்திட்டம் மற்றும் குறைநிரப்பு வரவு செலவு ஒதுக்கீட்டின் மூலம் மாவட்ட செயலகத்தினால் அரச கொள்வனவு வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் ரூபா 62.160 மில்லியன்களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 61.860 மில்லியன் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவுத் தலைப்பு | செலவினத் தலைப்பு விபரம் | தேறிய ஏற்பாடு கள் ஒதுக்கீடு | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| | **வழங்கல்கள்** | | | |
| 1201 | - காகிதாகிகள் அலுவலக தேவைகள் | 7.200 | 7.050 | 0.150 |
| 1203 | - உணவு பானம் மற்றும் சீறுடை | 0.460 | 0.432 | 0.028 |
| 2102 | - தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 3.200 | 3.123 | 0.077 |
| 2103 | - இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 1.300 | 1.283 | 0.017 |
| 2104 | - கட்டிட நிர்மாணம் | 50.000 | 49.972 | 0.028 |
| | மொத்தம் | 62.160 | 61.860 | 0.300 |

### 2.1.1 பெறுகைகளை திட்டமிடல்

மாவட்ட செயலகத்தின் மூலதன ஏற்பாடுகளின் மூலம் அலுவலக வளவில் கருத்தரங்கு மண்டபம் ஒன்று நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை ஆண்டிற்கான பெறுகை திட்டத்தில் உட்பட்டிருக்காத கருமம் ஒன்றாக இனங்காணக் கூடியதாக இருந்தது. இவ்விடயத்திற்காக கூறுவிலை அழைக்கும் போதும், பதிவு செய்யப்பட்டிருந்த 66 நிறுவனங்களில் 05 இல் இருந்து மாத்திரம் விலைமனு பெற்றிருந்ததென அறியக் கூடியதாக இருந்தது. இந்த 05 பேருக்கும் எழுத்து மூலமாக விலை மனு அழைப்பு அனுப்பப்பட்டதற்கான சான்றுகள் காணப்படவில்லை. இந்த ஒப்பந்த வேலைக்காக பெற்றிருந்த செயலாற்றுகை பாதுகாப்பு முறி குறிப்பிட்ட காப்புறுதி நிறுவனத்தினால் உறுதிப்படுத்தியவாறு போலியான ஆவணம் ஒன்று என அவதானிக்கப்பட்டதுடன் குறிப்பிட்ட வேலை பகுதியை சான்றுபடுத்திய போது உரிய திகதி குறிப்பிட்டிருக்கவில்லை.

## 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வாகனப் பயன்பாடு

மாவட்ட செயலகத்திற்கு சொந்தமாக மீளாய்வாண்டு இறுதி அளவில் 13 வாகனங்கள் காணப்பட்டதுடன், அந்த வாகனங்களின் மூலம் 190,691 கிலோ மீற்றர் ஓடப்பட்டுள்ளது. அந்த வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி வாகனங்களின் சேவை புரிதல் வாகனத் திருத்த வேலை மற்றும் வாகன காப்புறுதி செய்வதற்காக கூட்டுத்தொகை ரூபா 4,953,127 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வாகனங்களை ஓட்டுவதற்காக சாரதி சம்பளம் மற்றும் படிகள் இன்றி ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 26 செலவிடப்பட்டுள்ளது.

## 2.3 ஈடுபட்டுப் பொறுப்புக்களும் பொறுப்புகளும்

### வருடாந்த பாதீட்டு வரையறையை மிகைத்து ஈடுபட்டு பொறுப்புக்களை அணுகுதல்

2017 ஏப்ரல் 27 திகதி 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 02 (அ) பந்திக்கு இணங்காமல் 06 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 25.58 மில்லியன் ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 0.80 மில்லியனிற்கான ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ஏற்படுத்திக்

கொண்டிருந்ததுடன் ஒட்டு மொத்த ஈடுபாட்டு பொறுப்புகளின் தொகை ரூபா 1.21 மில்லியனாகும்.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சை சேர்ந்த தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க மன்றத்தினால் வழங்கியிருந்த நிதியங்களில் இருந்து செயற்படுத்தப்பட்ட மழை நீர்த் தொட்டிகள் வழங்கும் செயற்திட்டத்தில் வெருகல் பிரதேச செயலக பிரிவில் உப்புரல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் கிராம உத்தியோகத்தரினால் பயன்பெறுவோர் 15 பேருக்கு பெறவேண்டிய ரூபா 494,000 தொகைக்கான நலன்கள் அவர்களின் கணக்கிற்கு செலவு வைத்த பின்னர் மீண்டும் பயன்பெறுவோரிடம் பெற்று குறிப்பிட்ட கிராம உத்தியோகத்தரினால் அதனை பெற்று அந்த கருமத்திற்காக செலவிடப்பட்டுள்ளது.

## 2.5 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வு பந்திகள்

மாவட்ட செயலகம் தொடர்பாக கடந்த ஆண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அறிக்கைகளில் அடங்கியிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிகாட்டியிருந்த குறைவுகள் தொடர்பாக மாவட்ட செயலகத்தினால் சரிசெய்திருக்காத பந்திகளுடன் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2014 | 3.9 (அ) | **வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை சட்டரீதியாக உரித்தாக்காமை**<br>2011 அக்தோபர் மாதம் வரை மாவட்ட செயலகத்தினால் நடாத்தப்பட்டு வந்த திருகோணமலை பேதுரு கோட்டையின் 372 ஏக்கர் காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் வீடு உட்பட தொல்பொருளியல் நிலம் ஒன்றென வெளியிடப்பட்டி ருந்ததுடன் அதனது உரிமையை உரித்தாக்கி தருமாறு தொல் பொருளியல் பணிப்பாளர் நாயகத்தின் 2011 ஜனவரி 04 ஆம் திகதி M/EP/1/7A ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவித்திருந்த போதிலும் 2017 செப்டம்பர் 05 வரை சட்டரீதியாக உரித்தாகி கொடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 2014 | 3.9 (ஆ) | திருகோணமலை மாவட்ட செயலகம் அமைந்துள்ள காணி அரச மரக்கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக காணப்படுவதுடன் 2017 செப்டம்பர் 05 வரை அதன் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 2014 | 3.13 (உ) | வில்கம 1 காட்டிற்கு மத்தியில் சுற்றாடல் பூந்தோட்டம் ஒன்றினை சுற்றி யானை வேலி தயாரிப்பதற்காக வழங்கியிருந்த ரூபா 3.6 மில்லியன் முற்பணத் தொகையில் கொல்வனவு செய்திருந்த உபகரணங்கள் பாதுகாப்பற்ற முறையிலும் விளைவற்று காணப்பட்டது. தற்போது குறிப்பிட்ட சுற்றாடல் பூந்தோட்டத்தின் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. |

## 2.6 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மூதூர் பிரதேச செயலகத்திற்காக புதிய இரண்டு மாடி கட்டிடம் ஒன்று நிர்மாணித்தல்.

(i) இந்த ஒப்பந்த வேலைக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது அலுமினியன் பொருந்துக்கள் மற்றும் நில ஒடுகள் பதித்தல் ஆகிய கருமங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதும் முறையே 1,660,800 மற்றும் 212,598 ஆக கூட்டுத்தொகை ரூபா 1,879,398 தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் அத்திவாரத்தின் கருங்கற்கள் வேலைக்காக ரூபா 74,120 தொகையும் உட்பட மிகையாகச் செலுத்தியிருந்த மொத்தத் தொகை ரூபா 1,953,518 ஆகும்.

(ii) இந்த ஒப்பந்த வேலையை நிறைவேற்றுவதை ஒப்பந்தகாரர் பகிஷ்கரித்த காரணத்தினால் அத் திகதியில் உள்ளவாறு மீதியான வேலைகளின் பெறுமதி என கணிக்கப்பட்ட ரூபா 12,272,950 தொகையில் 25 சதவீதம் ஆகிய ரூபா 3,068,237 தண்டப்பணம் ஒன்று ஒப்பந்தகாரரிடம் அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அப்பணத்தில் ரூபா 1,500,314 தொகை செயலாற்றுகை பிணைமுறியை காசாக்கி அறவிடப்பட்டது என விளக்கமளித்திருந்த போதிலும் மீதியாகிய ரூபா 1,567,923 இற்கான தொகையினை அறவீடு செய்யப்பட்டதென அவதானிக்கப்படவில்லை.

(ஆ) மாவட்ட செயலகத்தின் 02 கட்டிடங்களுக்காக 2015/2016 மற்றும் 2017 மதிப்பீட்டு ஆண்டுகளுக்கான வீதவரி குறிப்பிட்ட ஆண்டுகளில் ஜனவரி மாதத்தில் செலுத்தாமல் தாமதித்து செலுத்தியமையால் ரூபா 24,925 தொகைக்கான 10 சதவீத கழிவினை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

(இ) கிண்ணியா பிரதேச செயலகத்திற்காக இரண்டு மாடி கட்டிடமொன்று நிர்மாணித்தல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) இந்த கட்டிடத்தின் தரை மாடியில் அமைந்துள்ள உணவு அறை மற்றும் சமூர்த்தி பிரிவுக்காக ஒதுக்கிய பகுதியில் 54.106 சதுர மீற்றர் தரை ஓடுகள் பதிக்கப்பட்டிருந்த போதிலும் அளவை பத்திரங்களில் குறிப்பிட்டுள்ளவாறு

76.328 சதுர மீற்றருக்காக பணம் செலுத்தியிருந்த காரணத்தினால் ரூபா 66,666 தொகை மேலதிக கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) இந்த கட்டிடத்தின் தரை மாடியில் மற்றும் முதலாவது மாடியில் சுவர் கட்டுதல் தொடர்பாக அளவை எடுக்கும் போது கதவுகள், யன்னல்களுக்காக 92.19 சதுர மீற்றர் கழிக்கப்பட வேண்டும் எனினும், அளவைப் பத்திரங்களில் 73.14 சதுர மீற்றர்கள் என கழித்து கணித்துள்ளமையினால் ரூபா 28,575 இற்கான மிகை கொடுப்பனவு ஒன்று ஏற்பட்டிருந்தது.

(ஈ) மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான உள்துறை முக வீதியில் அமைந்துள்ள 3B மற்றும் 1B இலக்கங்களை கொண்ட வீடுகளுக்காக மாதாந்தம் ரூபா 4000 பொருளாதார வாடகை ஒன்று அறவிட வேண்டுமென பிரதான பெறுமதி மதிப்பீட்டாளரினால் விதந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வீடுகளில் வதிவோர்களிடம் முறையே ரூபா 2,200 மற்றும் ரூபா 1000 வீதம் வீட்டு வாடகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. அந்த வீடுகளுக்காக 2012 ஜனவரி முதல் 2018 ஏப்ரல் வரை அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 364,800 தொகை என கணிக்கப்பட்டிருந்தது.

(உ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் கிராமிய உடகட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் விஷேட செயற்திட்டம் ஒன்றாக செயற்படுத்தியிருந்த பனிச்ச குளம் பாதை நிர்மானிக்கும் செயற்திட்டத்தில் 1,162.60 கனமீற்றர் ABC வழங்கி பாதையில் மீது பரப்பி தகர்பதற்காக ரூபா 4.930,237 தொகை செலுத்தியிருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்ட வெளிகளை பரிசோதனையின் போது கண்டறியப்பட்டவாறு போடப்பட்டிருந்த ABC யின் அளவு 797.8 கனமீற்றர்கள் என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், ABC 364.8 கனமீற்றர்களுக்காக VAT வரி உட்பட ரூபா 1,779,058 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

### 2.7 பொது மக்களுக்கு சேவை வழங்கள்

---

மாவட்ட செயலகத்திற்கு இணையதளம் ஒன்று வடிவமைப்பது அதன் மூலம் தேவையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல் மற்றும் பொதுமக்கள் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளல் நடைமுறையொன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும், தயாரித்திருந்த இணையத்தளத்தின் மூலம் பொதுமக்களின் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ளும் வசதிகள் ஏற்படுத்தியிருக்கவில்லை.

### 2.8 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

---

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | % |
| 2013 | மீண்டுவரும் | 295.70 | 281.43 | 14.27 | 4.82 |
| | மூலதன | 675.30 | 643.13 | 32.17 | 4.76 |
| | **மொத்தம்** | **971.00** | **924.56** | **46.44** | **4.78** |
| 2014 | மீண்டுவரும் | 291.29 | 286.32 | 4.97 | 1.7 |
| | மூலதன | 38.40 | 36.74 | 1.66 | 4.3 |
| | **மொத்தம்** | **329.69** | **323.06** | **6.63** | **2.0** |
| 2015 | மீண்டுவரும் | 352.92 | 344.12 | 8.80 | 2.49 |
| | மூலதன | 53.30 | 52.32 | 0.98 | 1.89 |
| | **மொத்தம்** | **406.22** | **396.44** | **9.78** | **2.41** |
| 2016 | மீண்டுவரும் | 378.00 | 367.20 | 10.80 | 2.86 |
| | மூலதன | 54.00 | 53.52 | 0.48 | 0.88 |
| | **மொத்தம்** | **432.00** | **420.72** | **11.28** | **2.61** |
| 2017 | மீண்டுவரும் | 380.28 | 373.87 | 6.40 | 1.68 |
| | மூலதன | 64.00 | 63.00 | 1.00 | 1.56 |
| | **மொத்தம்** | **444.28** | **436.88** | **7.40** | **1.66** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

**(அ) ஒதுக்கீட்டு கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

**(i) மிகை ஏற்பாடுகள் வழங்கியிருத்தல்**

04 செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 1.738 மில்லியனிற்காக மிகை ஏற்பாடு செய்திருந்ததுடன் அந்த செலவு விடயங்களுக்கான ஏற்பாடுகளில் கூட்டுத்தொகை ரூபா 3.836 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தியிருந்தமையால் சேமிக்கப்பட்டிருந்த தொகை தேறிய ஏற்பாடுகளில் 25 சதவீதம் முதல் 65 சதவீதம் வரை வீச்சு அளவைக் கொண்டிருந்தது.

**(ii) ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்**

15 ஏனைய அமைச்சுகள் மற்றும் 06 திணைக்களங்களினால் பல்வேறு கருமங்களுக்காக முறையே ரூபா 2222.23 மில்லியன் தொகை, ரூபா 49.39 மில்லியன் தொகை ஆக கூட்டுத்தொகை ரூபா 2,271.62 மில்லியன் தொகை ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அவற்றின் கூட்டுத்தொகை 1519.61 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கியிருந்த ஏற்பாடுகளில் ரூபா 752 மில்லியன் தொகை அதாவது 33 சதவீதம் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

- **கடற்தொழில் மற்றும் நீரக மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு (செலவு தலைப்பு 151-2-3-60-2506) கடற்தொழில் கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்**

---

(i) குச்சவெலி பிரதேச செயலக பிரிவில் சாகரபுர கடற்தொழில் கிராமத்தில் 27 புதிய வீடுகளில் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் 21 பயன்பெறுவோருக்கு ரூபா 5.190,000 தொகை செலுத்தியிருந்த போதிலும் அந்த வீடுகளின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ii) சாகரபுர கடற்தொழில் கிராமத்தில் வீடு ஒன்றின் அளவு 510.50 சதுர அடியாக நிர்மாணிக்க வேண்டும் எனினும் அதற்கு குறைவான சதுர அளவினதாக நிர்மாணித்திருந்த 04 நலன்பெறுவோருக்கு இது தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளாமல் ரூபா 955.000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டள்ளது.

(iii) சாகரபுர கடற்தொழில் கிராமத்தில் 27 வீடுகளுக்கு குழாய் நீர் வழங்குவதற்காக 10,000 லீற்றர் PVC நீர் தொட்டி ஒன்று கொல்வனவு செய்வதற்காக ரூபா 165,000 தொகை செலுத்தியிருந்த போதிலும் சந்தை விலை தொடர்பாக இணைய தொழில்நுட்பத்தின் மூலம் பெற்றிருந்த விடயங்கள் அடிப்படையில் அந்த வகையான நீர் தொட்டி ஒன்று 104,500 விலைக்கு கொல்வனவு செய்வதற்கு இயலுமாக இருந்தமையால் ரூபா 60,500 இற்கான மிகை கொடுப்பனவு ஒன்று ஏற்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.

(iv) கந்தளாய் பிரதேச செயலக பிரிவில் 87 அக்போபுர சுஹத மாவத்தை இன்டலொக கல் பரப்பி தயாரிப்பதற்கான மதிப்பீட்டில் விடய இலக்கம் 8 இன் பிரகாரம் 25 $N/mm^2$ கனம் உடன் 75 மி.மீ மண் பரப்பி தயரிக்கப்பட்ட மேல்பகுதியில் 233.22 சதுர மீற்றர் அளவில் மாத்திரம் இன்டலொக் கற்கள் பரப்பி இருந்தது என 262.50 சதுர மீற்றர் அளவு இன்டகொக் கற்கள் பதித்துள்ளதாக தொழில் நுட்ப அலுவலரின் சான்றுபடுத்தியிருந்தமையால் 29.28 சதுர மீற்றர் தொகைக்காக ரூபா 65.616 இற்கான மிகை கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- **தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பணியகத்தின் (செலவுத் தலைப்பு 165) மழை நீர் தொட்டிகள் வழங்கும் செயற்திட்டம்)**

---

10 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 100 நலன்பெறுவோருக்காக மழைநீர் தொட்டி வழங்குவதற்கு 2017 ஆண்டின் போது ரூபா 9,643.575 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கீழ்வரும் காரணங்களினால் இந்த செயறதிட்டத்தின் குறிக்கோளுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை என வெளிக்கள கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(i) இந்த மழை நீர் தொட்டிகளில் சேகரிக்கும் நீர் குடிக்கும் விடயங்களுக்காக பயன்படுத்தாமல் சுத்திகரிக்கப்பட்ட நீர் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளல்.

(ii) நீர் தொட்டிகள் பொருத்துதல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பாக பயன் பெறுவோரிடம் போதியளவு அறிவு இருக்காமை.

(iii) இந்த செயற்திட்டத்திற்கான நீர் தொட்டிகள் கொல்வனவு செய்த போது விவரக் குறிப்புகளின் தேவையான விபரங்கள் அடங்கியிருக்காமை சிக்கனத்துடன் செயற்படுவதற்கு முடியாதிருந்தது.

**2.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்தின் 27101 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 35.00 | 34.07 | 23.00 | 22.74 | 100.00 | 100.00 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவை கடன் மிதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர ரூபா 1,466,256 தொகை காணப்பட்டதுடன் அந்த நிலுவை கடன் மீதி 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான கால வீச்சு முதல் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவை கடன் மிதியை அறவீடு செய்வதற்கான தொடர் செயல் நடவடிக்கை பலவீன நிலைமை காணப்பட்டது.

**(ஆ) ஏற்பாடுகளுக்கு முரணாக கடன் வழங்குதல்**

மாவட்ட செயலகத்தினால் கடன் செலுத்தும் போது கடைபிடிக்க வேண்டிய ஏற்பாடுகளை கடைபிடிக்காமல் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 285,470 இற்கான இடர் கடன் ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) இடமாற்றம் பெற்று வந்திருக்கும் உத்தியோகத்தர்களின் கடன் மீதியை அறவீடு செய்யாமை**

(i) வேறு அலுவலகங்களில் கடமையாற்றி விட்டு இந்த அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தரிகளின் கூட்டுத்தொகை ரூபா 208.013 கடன் மீதிகள் 2004 ஆகஸ்ட் 11 திகதி 118 ஆம் இலக்க தேசிய பாதீடு சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த கணக்கு பொழிப்பு மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மாவட்ட செயலகத்தின் 15 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,636,160 இற்கான இடர் கடன் தொடர்பாக தாபனக் கோவையின் அத்தியாயம் xxiv பிரிவு 3 மற்றும் பொது 272 கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கடன் பெறும் நபரினால் கடன்தொகை குறிப்பிட்ட விடயத்திற்காக பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுபடுத்தும் எழுத்துமுல சான்றுகள் சமர்பித்திருக்கவில்லை.

## 2.10 கட்டுநிதிக் கணக்கு

மீளாய்வாண்டிற்கான மாவட்ட செயலகத்தினால் தயாரித்திருந்த கட்டுநிதி மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்தம் பெறுவதற்கு எதிர்பார்த்த கட்டுநிதிகள் மாதாந்தம் விண்ணப்பித்துள்ள கட்டுநிதி மற்றும் கிடைத்திருந்த கட்டுநிதிகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| மாதம் | திட்டமிட்டுள்ள வாறு விண்ணப் பிக்க வேண்டிய கட்டுநிதி | விண்ணப்பித்த கட்டுநிதி | கிடைத்திருந்த கட்டுநிதி | விண்ணப்பித்த கட்டுநிதி மற்றும் கிடைத்திருந்த கட்டுநிதி இடையே வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| ஜனவரி | 95.34 | 95.34 | 82.20 | (13.14) |
| பெப்ரவரி | 98.50 | 98.50 | 83.21 | (15.30) |
| மார்ச் | 266.30 | 266.30 | 135.00 | (131.30) |
| ஏப்ரல் | 197.22 | 197.22 | 168.30 | (28.92) |
| மே | 256.62 | 256.62 | 157.46 | (99.16) |
| ஜுன் | 165.22 | 165.22 | 139.40 | (25.82) |
| ஜுலை | 354.32 | 354.32 | 183.10 | (171.22) |
| ஆகஸ்ட் | 501.10 | 501.10 | 233.33 | (267.73) |
| செப்டம்பர் | 407.34 | 407.34 | 249.58 | (157.76) |
| அக்தோபர் | 304.50 | 304.50 | 304.10 | (0.40) |
| நவம்பர் | 658.10 | 658.10 | 329.20 | (328.90) |
| திசெம்பர் | 446.73 | 446.73 | 414.02 | (32.71) |
| மொத்தம் | 3751.29 | 3751.29 | 2478.9 | (1272.39) |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகத்தினால் 2017 ஆண்டின் போது ரூபா 3751.29 மில்லியன் தொகை ஒன்று கட்டுநிதியில் பெறுவதற்காக திட்டமிட்டிருந்ததுடன் அந்த முழுத் தொகையும், விண்ணப்பிக்கப்பட்டது ஆனால் விடுவிக்கப்பட்டிருந்த கட்டு நிதி ரூபா 2478.9 தொகையாக காணப்பட்டமையால் கிடைக்காதிருந்த ரூபா 1272.39 மில்லியன் தொகையில் எதிர்பார்க்கப்பட்ட கருமங்கள் நிறைவேற்றிய முறை கணக்காய்விற்கு கேள்விக்குறியாக உள்ளது.

(ஆ) நிதிப்பிரமாணங்கள் 371(5) இன் பிரகாரம் குறிப்பிட்ட கருமங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றிருந்த நிமித்த கட்டுநிதியினை தீர்க்க வேண்டுமெனினும், 04 சந்தர்ப்பங்கள் தொடர்பாக வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 305,000 தொகைக்கான

நிமித்த கட்டுநிதி குறிப்பிட்ட கருமம் முடிவடைந்து 01 மாதம் முதல் 02 மாதங்கள் வரையான கால வீச்சு தாமதத்தில் அந்த கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தன.

### 2.11 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்பட்ட 04 பொது வைப்பு கணக்குகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 101.885 மில்லியன் காணப்பட்டதுடன் 2 வருடங்கள் மிகைத்துள்ள (காணி வைப்புகள் தவிர) கூட்டுத்தொகை ரூபா 3.18 மில்லியன் தொகைக்கான 133 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.12 வங்கி கணக்குகள் நெறிப்படுத்தல்

மாவட்ட செயலகத்தினால் 2017 ஆண்டின் போது செயற்படுத்தியிருந்த 04 வங்கி கணக்குகள் தொடர்பாக சமர்பித்திருந்த வங்கி இனக்கக்கூற்று பரிசோதனை மேற்கொண்ட போது வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்கு சமர்பிக்கப்படாத கூட்டுத்தொகை ரூபா 15.561 மில்லியன் தெகை பெறுமதியான 16 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

### 2.13 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறைப்பிரகாரம் மற்றும் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| i. | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 திகதி 842 இலக்க திறைசேரி சுற்றறிக்கை நிதிப்பிரமாணம் 502 | நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை. |
| ii. | பிணை பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(ii) | பேணப்பட்டிருக்கவில்லை |
| iii. | இழப்புகள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை |

### 2.14 இணக்கமின்மை

#### 2.14.1 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை சந்தர்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | |
| i. அத்தியாயம் xix இல் பந்தி 5.2.1 | 784,800 (2018 ஏப்ரல் மாதம் வரை வீட்டு வாடகை கணிகக்கப்பட்டுள்ளது) | மாவட்ட செயலகத்தை சேர்ந்த பேதுருகொடுவ மார்கோஸா டெரஸ் அமைந்துள்ள 5 அரசாங்க நிரந்தர வீடுகளில் வதிவோரிடம் வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| ii. அத்தியாயம் xix பந்தி 5.2.1 | 2,502,550 (2018 பெப்ரவரி வீட்டு வாடகை கணிப்பிட்டள்ளது.) | மாவட்ட செயலகத்தை சேர்ந்த அரசாங்க வீடுகளில் வதியும் உத்தியோகத்தர்களை மாதாந்த சம்பளத்தில் 12½ வீதம் வீட்டு வாடகைக்காக அறவிடப்பட வேண்டுமெனினும் விஷேட காரணம் ஏதும் இன்றி பிரதான பெறுமதி மதிப்பீட்டாளரின் அறிக்கை மீது 12 அரச வீடுகளின் வதிவோரிடம் பொருளாதார வாடகை அறவிடப்பட்டிருந்தது. |
| iii. அத்தியாயம் xix பந்தி 7.2 | -- | பொது வீடுகளில் வதிவோரின் வாடகைக் காலம் 5 வருடங்களைக் கடந்துள்ள வதிவோரிடம் தண்ட வாடகை |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| i. பந்தி 03 (1) | 8,426,938 (மதிப்பீட்டு பெறுமதி) | மாவட்ட செயலகத்தினான் உள் நாட்டு விவகார அமைச்சின் (செலவு தலைப்பு 271-1-0-2014) ஏற்பாடுகளின் 2017 ஆண்டின் போது மாநாட்டு மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப் பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பிரதான பெறுகை திட்டத்தில், செயல் நடவடிக்கை திட்டத்தில் மற்றும் பாதீட்டில் விபரங்கள் ஏதும் குறிப்பிட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| ii. | பந்தி 50(2) | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்திற்கு உரிய வரைபு மதிப்பீட்டு முடிந்த அளவு முற்றாக பிழையற்றவை என்பதை பொறுப்பாக இருக்க வேண்டியதுடன் மாவட்ட செயலகத்தினால் உள்நாட்டு விவகார அமைச்சு (செலவு விடயம் 271-1-0-2014) இன் கீழ் மூதூர் மற்றும் கிண்ணியா ஆகிய இரண்டு பிரதேச செயலகங்களுக்காக முறையே ரூபா 25.5 மற்றும் 24.5 ஏற்பாடுகள் மேற்கொண்டு அதில் ரூபா 8.42 மில்லியன் சேமித்திருந்தது. |
| iii. | பந்தி 371(2)(இ) | 305,000 | மாவட்ட செயலகத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது 04 சந்தர்பங்களை வழங்கியிருந்த முற்பணங்கள் 10 முதல் 24 நாட்கள் காலம் வரை தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டல் | | |
| | பந்தி இலக்கம் 7.9 II (ஆ) | 12,272,950 (மொத்த ஒப்பந்த வேலையின் உடன் பட்ட பெறுமதி ரூபா 30,006,285 தொகை ஆக காணப்பட்டதுடன் ஒப்பந்த வேலையை புறக்கணித்த சந்தர்ப் பத்தில் காணப்பட்ட மீதியான வேலை களின் பெறுமதி) | மூதூர் பிரதேச செயலகத்திற்காக புதிய இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக பொறியியல் மதிப்பீடு மற்றும் ஒப்பந்தகாரரின் கூறுவிலைகளிடையே முரண்கள் 20 சதவீதம் முதல் 52 சதவீதம் வரை காணப்பட்டதுடன் அந்த விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் அந்த நடைமுறை சாத்தியமில்லாத மதிப்பீடுகளின்படி ஒப்பந்த வேலை விதந்துரைக்கப்பட்டிருந்தமையால் உரிய நேரத்தில் வேலையை பூர்த்தி செய்யாமல் ஒப்பந்த வேலைகளை புறக்கணிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக மீதி வேலையை வேறு ஒரு ஒப்பந்தகாரர் ஒருவர் மூலம் மீதி வேலைப் பகுதியை நிறைவேற்றிக் கொள்வதற்காக நேரிட்டிருந்தது. |

## 2.15 மனிதவள முகாமைத்துவம்

### 2.15.1 இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேலே 2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான மாவட்டச் செயலகத்தினால் ஆளணி வேதனங்கள் செலவினத் தொகுதிக்காக ரூபா 326,725 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 338,927 தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவி யணியினர் | உள்ளபடி யான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | மிகை பதவி யணியினர் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 60 | 49 | 11 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 29 | 14 | 15 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1022 | 777 | 245 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 145 | 118 | 27 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 06 | - | 05 |
| | மொத்தம் | 1257 | 964 | 298 | 05 |

சேர்க்கப்பட்டிருந்த மேலதிக பதவியணியினர் தொடர்பாக முறையான அங்கீகாரம் ஒன்று பெற்றுக் கொள்வதற்காக நிறுவனத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.16 அரச ஊழியர்கள் பிணை வைத்தல்

மாவட்ட செயலகத்தின் மற்றும் பிரதேச செயலகங்கள் பணம் பெற்றுக் கொள்ளல் மற்றும் பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர் மற்றும் கலஞ்சியத்திற்கு பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தரினால் நிதிப் பிரமாணம் 880 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைப்பு செய்திருக்கவில்லை.